பித்தலாட்டமே, உன்பெயர்தான் ஏகாதிபத்யமா?

Phone No. 4502 · விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458 · [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. · MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] · சென்னை (18—11—49) · வெளியூர் (19—11—49) · [இதழ் 94

பீதி மீறி, முகாரி யெழுந்து பூச்சாண்டியில் முடிகிறது!

ஐ. நா. அரசியல் கமிட்டியில் பிரிட்டிஷ் மந்திரி பேயாட்டம்!

ஏகாதிபத்ய 'ஜான்புல்கள்' முதலாளித்வ 'வல்லூறுகள்' சலசலப்பு

'பாலைவனத்தில் பளிங்கு மண்டபம்' பாரோர் கண்டனத்துக்காளாகுமா?

" ஹிட்லரிஸம் மிக மிக ஆபத்தான முறையில் தலைவிரித்தாடிய நாட்களில்கூட ஜெர்மனியை எதிர்த்து உலக அபிப்பிராயம் இவ்வளவு கடுமையாக இருந்ததில்லை யென்று கூறும் அளவுக்கு இன்று ரஷ்யாவை யெதிர்த்து உலக நாடுகளனைத்தினுடையவும் அபிப்பிராயமும் திரண்டு நிற்பதேன்?

" சோவியத் சர்க்காரே தங்கள் மக்களை உலக அநுதாபம் பெற வொட்டாமல் தடுத்து நிறுத்தி வருகிறார்கள். சோவியத் ஆட்சியின் உலோகாயுதக் கொள்கைப் போக்கால் உலகத்தின் மன சாட்சியே புரட்சியலைகளால் மோதுண்டு நிற்கிறது. இதைப் போய் உங்கள் சர்க்காருக்கு உரையும், எம். விஷின்ஸ்கி!

" சர்வாதிகார ஆட்சி பீடமென்று தனது கொடுமைகளை தன் மக்கள்மீது மட்டுமின்றி, ஐரோப்பா—ஆசியாமீது நோடி நடவடிக்கை மூலமும், உலகின் ஏனைய ஒவ்வொரு பகுதியின் மீது மறைமுகவழி முறைகள் மூலமும் புகுத்திக் கெடுக்க முயன்று வருகிறது.

" உறவு முறைகள் சிறக்கவில்லை. அலட்சியம், கேலி, கிண்டல்களுக்குள்ளாகும் சுதந்தர உலகம் சோவியத் சர்க்காரோடு தனக்குள்ள தொடர்பை நாளுக்கு நாள் குறைத்துக்கொண்டு வந்துவிடப் போகிறது."

பிரிட்டனும் அமெரிக்காவும் உலகைப் போர்பாதைக்கு அழைத்துச் செல்கின்றன; அவை போர் வெறிகொண்டு திரிகின்றனவென்று குற்றஞ் சாட்டி சோவியத் ரஷ்யா கொண்டுவந்த தீர்மானமொன்றை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின அரசியல் கமிட்டி இப்போது விவாதித்து வருகிறது. அவ் விவாதத்தின்போது பிரிட்டன் பிரதிநிதி தோழர் ஹெக்டர் மெக்நெயில் சோவியத் ரஷ்யா மீது பாடிய 'வசை புராணத்தின்' சிறு பகுதி யொன்றே நாம் மேலே எடுத்துக் காட்டியிருப்பது.

ஐ. நா. அரசியல் கமிட்டியில அழகான ஆங்கிலத்தில் அள்ளிக் கொட்டியிருக்கிறார் தோழர் மெக்நெயில். நாஜிவெறியன் ஹிட்லர் சர்வாதிகாரம் பூண்டு பேயாட்டம் ஆடிய காலத்தில் கூட, உலக அபிப்பிராயம் அவன் மீதும், அவன் நாட்டின மீதும் அவ்வளவு கடுமையாக இருந்ததில்லையாம், ஆனால் இன்று சோவியத் ரஷ்யாவை யெதிர்த்து உலகமே கைகோர்த்துத் திரண்டு நிற்கிறதாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்தன்மையுணராதவர்களலலர் நாம். தோழர் மெக்நெயில முதலாளித்துவ வல்லரசு ஏகாதிபத்திய நாடொன்றின ஒலிபெருக்கியாகப் பேசுகிறாரென்பதையும் நாம்மறக்கவிலலை. புரைபட்ட, பொய்யான கருத்தொன்றை மெய்போலவே, உலக அரங்கமொன்றின மத்தியில் நின்று, சர்வதேசமும் செவி மடுக்கும் தன்மையில் பேசுகிறார் பிரிட்டன் பிரதிநிதி யென்றால், எதற்கும் துணிந்தது ஏகாதிபத்தியம் என்பதைத்தானே காட்டுகிறது.

ஹிட்லரைக்கூடஎதிர்க்காத

'உலக அபிப்பிராயம்' ஸ்டாலினை எதிர்க்கிறது என்கிறாரே மெக்நெயில், அந்த 'உலக அபிப்பிராயம்' எனபது எது? என்பது பற்றி அவரும் தெளிவுபடுத்த வில்லை; நமக்கும் சம்சயமாகவே இருக்கிறது. பொதுவாக, 'உலக அபிப்பிராயம்' என்பதின் உண்மையான உட்பொருள் உலக மக்கள் பெரும்பான்மையோரின் அபிப்பிராயம் என்பதாகத்தானிருக்க முடியுமென்பதை யாரும் மறுக்க முடியாது. உலக மக்கள் பெரும் பான்மையோரின் அபிப்பிராயமாக இருப்பது, அப்பெருவாரியோரின் நன்மைக்குகந்ததாகவே இருக்க வேண்டும, இருக்க முடியும். தோழர் மெகநெயில் கூறுவது இந்த 'உலக அபிப்பிராயம்' தானா. அல்லது வேறு கோணத்திலிருந்து காணும் 'உலக அபிபபிராயமா' என்று யாருக்கும் பண மூட்டைப் பாது காப்பும் வல்லரசு ஆட்சியும் பெற்று விளங்கும ஏகாதிபத்திய இருப்புக் கோட்டைகளிலிருந்து புறப்படுவதுமட்டுந்தான் 'உலக அபிப்பிராயம்' என்று மெக்நெயில் கூறுவாரேல், அத்தகைய 'உலக அபிபபிராயந்தான்' இன்று ரஷ்யாவைச் கடிகிறதுஎன்று கருதுவாரேல் இதில நாம வியப்போ வேறெதுவோ கொள்வதற்கில்லை.

பொதுவுடமைக்கும் தனியுடமைக்கும் எவ்வளவுவேறுபாடு! அந்த அளவு வேறுபாட்டை அப்படியே மனதிலிறுத்தித்தான்பிரிட்டன்பிரதிநிதி ஐ. நா. அரசியல் கமிட்டியில தொண்டை 'கரகரக்'கப் பேசியிருக்கிறார். கிழக்கு ஐரோப்பாசிவப்பாகிவிட்டது.

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

ஐ. நா. வில் அங்கம்பெறவேண்டிய சீனக்குழுவினர் யார்?

'தலைமறைவாய்த் திரிந்து வாழும் தேசீயக் கட்சியார்க்கு உரிமையில்லை'

'பிற்போக்கு கூமின்டாங்குக்குப் பதில் மக்கள் குடியரசை ஏற்றுக்கொள்க'

ஐ. நா. வுக்குக் கம்யூனிஸ்ட் சர்க்கார் தந்தி

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நடவடிக்கைகளில் கலந்து கொள்ள சீனத் தேசீயவாதிகள் தூதுகோஷ்டிக்கு இருந்து வரும் உரிமைகளை உடனடியாக ரத்து செய்யுமாறு சீனக் கம்யூனிஸ்ட் சர்க்கார், ஐ. நா.வைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. நவம்பர் 15-ல் விடப்பட்டிருப்பதாக புதிய சீனா (கம்யூனிஸ்ட்) செய்தி நிலையம் கூறுகிறது.

சீனத் தேசீய சர்க்காரின் தூது கோஷ்டிக்கு சீனாவின் பிரதிநிதியாகத் திகழ தினைத்துணையும் உரிமையில்லை யென்று ஐ. நா. செக்ரடரி-ஜெனரலுக்கு கம்யூனிஸ்ட் சீனா அயல்நாட்டு மந்திரி தந்தியனுப்பியுள்ளாராம்.

'மக்கள் குடியரசின் மத்திய சர்க்காரே சீனப் பிரதேசத்துக்கும் மக்களுக்கும் விடுதலையளித்துள்ளது. இப்போது தலைமறைவாயும் சிதைந்தும் கிடக்கும் கூமின்டாங் பிற்போக்குச் சர்க்கார் சீனமக்கள் பிரதிநிதித்துவத்தை முற்றிலும் இழந்துவிட்டது. எனவே, சீனத் தேசீய சர்க்காரின் தூதுக் குழு என்ற பெயரில் இருக்கும் 'கோஷ்டி' தலைமறைவாய் வாழும் ஒரு சிலரின் கைப்பாவைக்குழுவேயாகும்' என்று அந்தத் தந்தி கூறுகிறது.

"நான் அப்படி நினைக்கவில்லை"!

புதுடெல்லி, நவ. 17—

பத்திரிகை நிருபர் மாநாடொன்றில் பண்டித நேரு நேற்றுப் பேசுகையில், "இந்திய சர்க்காரின் இன்றைய கொள்கை—கோட்பாடுகளனைத்தும் முதலாளித்துவத்துக்குத் தான் பணியும் போக்கிலேயே இடுப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மை தானா"வென்று ஒரு நிருபர் கேட்டார்.

"நான் அப்படி நினைக்கவில்லை." என்று பண்டித நேரு பதிலளித்தார்.

பத்திரிகை மீது அங்கும் அடக்குமுறை அம்பு!

காணிக்கை செலுத்தக் கையாளும் புது முறை

'ஓவ்வ' என்ற பாமிய தின சரி பத்திரிகையின் ஆசிரியர் தனது பத்திரிகையின் மீது சர்க்காரால கோரப்பட்ட ஜாமீன் தொகையைக் கட்ட வசதியில்லாமல், அதனைப் பொதுமக்களிடமிருந்தே வசூலித்து விடுவதற்கு ஒருவழி கண்டுபிடித்தாராம்.

பத்திரிகையின் உதவி யாசிரியர்கள், சிப்பந்திகள், தனது மனைவி, இன்னும் ஆடவும் பாடவும் தெரிந்த இரண்டொருவர் ஆகியோருடன் அவர் நாள்தோறும் நகர பொதுவிடங்களுக்கு சென்று, சர்க்கார் கோரியிருக்கும் ஜாமீன் தொகை விபரத்தைக்கூறி, பணம்திரட்டுகிறாராம். இவ்வாசிரியர் தம் குழுவினருடன் எடுத்துச் செல்லும் அட்டைகளில் 'சர்க்கார் கேட்ட ஜாமீன் கட்ட பணம்' 'ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கொடுத்தால் போதும்' என்பன போன்ற சொற்றொடர்கள் பொறிக்கப் பட்டுள்ளனவாம்.

மார்க்கெட் பக்கம் அக்குழுவினர் வந்த போது பார்மியத்தலைவரின் மனைவியே ஒரு ரூபாய் உண்டியலில் போட்டாராம்! மற்றொரு கடைத்தெருவில் இரண்டிரண்டணாவாக ரூ 60 சேர்த்து மாதாகள் சங்கமொன்று கொடுத்ததாம். நடனமாடினால்தான் பணமென்று சிலர் சொல்ல, ஆசிரியர் நடனமுமாடினாராம்!

பெண்டிர்க்கும் ஆடவரேற்பதை யொத்த சம்பளம்

சமூக நீதியைக் கொன்று தொழிலாளர் சக்தியைக் கெடுக்கவேண்டாம்

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் சுற்றறிக்கை

லேக்சக்ஸஸ், நவ. 17—

சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் (ஐ. எல். ஓ) தன்னிடம அங்கம் வகிக்கும் உறுப்பின நாடுகளுக்கெல்லாம் அனுப்பி வைத்திருக்கும் சுற்றறிக்கையொன்றில், ஆடவரைப்போலவே பெண்டிருக்கும் சமமான சம்பளங்கொடுக்க வேண்டுமென்பதற்கான யோசனையையும், அதை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய வழிவகைகளையும் எடுத்துக்காட்டியுள்ளது.

"சமூக நீதி என்ற அளவில் மட்டுமன்றி, தொழிலாளர் சக்தியையும தக்கமுறையில் பயன்படுத்திக்கொள்ளும திட்டத்துக்குகந்ததாகவும் ஆடவர் பெண்டிரிடைய வேற்றுமை கற்பிக்க இல்லைத்தக்கூடாதென மேற்படி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மாலை மணி

சென்னை 18—11—49 வெள்ளிக்கிழமை

மலர்ச்சி பெறும் தமிழ்!

“சமஸ்கிருத நூல்கள் தேவமயமாய் உள்ளன, அவற்றில் மனிதர்களுக்கு இடமில்லை, புராணங்கள் பற்றியே அவை கூறுகின்றன. ஆனல் அகநானூறு, புறநானூறு கலித்தொகை போன்ற பண்டைய தமிழ் இலக்கியங்களில் இயற்கையின் அழகு, காதல், வீரம் ஆகிய மூன்றுந்தாம் இடம் பெறுகின்றன.”

என்று, சென்னை பச்சையப்பன் கல்லூரி கலை விழாவில், அறிஞர் ஆர். கே. சண்முகம் அவர்கள் ஆற்றியிருக்கும் தெளிவுரை, உண்மைக்குப் பரிந்து பேசுவோரின் உள்ளங்களில் மகிழ்ச்சி வெள்ளத்தைப் பாய்ந்தோடச் செய்வதாக இருக்கின்றது. அவரது அந்த உரையில் ஆழ்ந்த அறிவு, தெளிந்த சிந்தனை, உண்மை நிலை, உயரிய பண்பு இவையனைத்தும் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கின்றன. அப்படிப்பட்ட அந்த உரையை ஆற்றி யிருப்பதன் மூலம், அவர் அறிஞராக மட்டுமில்லாமல், அந்த அளவிற்கு அச்சந்தவிர்த்துத், துணிவுடன், தான் கொண்ட உண்மைக் கருத்தை எடுத்துச் சொல்லும் ஆற்றல் படைத்தவராகவும் காட்சியளிக்கிறார். அந்தத் துணிவு, அவருக்கு ஏற்பட்டதற்காக நமது பாராட்டுதல்!

சமஸ்கிருதம்-மனிதனுக்குத் தேவையற்றதைக் கொண்டிருக்கிறது; தமிழ்—மனிதனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, வாழ்வின்பத்திற்கு இன்றியமையாத மெருகு ஏற்றுவனவாக விளங்கும் அழகு, காதல், வீரம் இம் மூன்றையும் உடையது. இந்தக் கருத்தை, அறிஞர் ஆர். கே. சண்முகமும், அவர் போன்ற ஏனையோரும் மக்களிடத்தில் நெடுநாட்களுக்கு முன்பே வலியுறுத்தத் தொடங்கி யிருப்பார்களாயின், தமிழகம் இது நாளில் தன் நிகரில்லா நாடாகக் காட்சியளித்திருக்கும்.

செத்த சமஸ்கிருத மொழிக்கு உயிரளிக்கும் முயற்சியில், வைதிக ஆதிக்க வகுப்பினரும், அவரடி தொழுது வாழும் சில சவுண்டிகளும இந்தக் காலத்தில் ஈடுபட்டுள்ளனர். வைதிக ஆதிக்க வகுப்பினரின் முழு முயற்சியும் சமஸ்கிருதத்திற்கு உயர்வு அளிப்பதிலும், சமஸ்கிருதத்தை நாட்டுப் பொது மொழியாக ஆக்குவதிலும், அதனை அரசியல் மொழியாகச் செய்துவிடுவதிலும் செலுத்தப்பட்டு வருகின்றது. ஆதிக்க வகுப்பைச் சேர்ந்த உயர்நீதி மன்ற நீதிபதியிலிருந்து, ‘பிணம் தூக்கி’ வரையில், சமஸ்கிருதம் பற்றியும், அதன் ‘உயர்வு’ பற்றியும் பேசிக் கொண்டு வருகின்றனர். வைதிக ஆதிக்க வகுப்பினரின் ஏடுகள் அவர்களின் ‘நச்சு நீர்’ பேச்சுக்கு அன்றாடம் விளம்பரங்கொடுத்து, மக்களின் பைந்தமிழ் உள்ளத்தில் அதனைப்பாயச் செய்கின்றனர். ‘சிறிய திருவடி’யாகப் பணியாற்றுவதில் வல்லவரான மந்திரி மாதவமேனனும் ‘சமஸ்கிருதக் குழிப்பிள்ளை’யை மடியேந்தி, நாட்டில் வலம் வந்த வண்ணம் இருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில், அறிஞர் சண்முகம், ‘பசுந்தமிழ்ப்பைஞ் சுனையின்’ தன்மையையும் ‘சமஸ்கிருத நச்சு நீர்ப் பொய்கையின்’ தன்மையையும் உணர்த்தி, சீரிய சொற்பொழிவாற்றியிருப்பது, உடைந்த தமிழர்களின் உள்ளத்தை எஃகு உள்ளமாக ஆக்குவதொன்றாகும்.

தமிழின் தனிப் பெருமையைப் பூரிப்புடன் அவர் கூறுகிறார், **“கிரேக்கமொழி லத்தீன் ஹீப்ரு, சமஸ்கிருதம், தமிழ் ஆகியவை உலகின் உன்னத மொழிகள். ஆனல் இன்னும் உயிருடனிருப்பது தமிழ்மொழி ஒன்றுதான். இது தமிழ் மொழியின் தனிப் பெருமை”** என்று. இத்தகைய கருத்து ஏனைய தமிழக அறிஞர்களின் உள்ளங்களினின்றும் எதிரொலிக்க வேண்டும். அதனைக் கேட்டு இன்பக் கேணியிற் தமிழ்மக்கள் குளிக்கவேண்டும். அது கண்டு நாம் களிக்கவேண்டும், வீம்பு பேசித் திரியும் சவுண்டிகளுக்கு இது போன்ற உரைகள் சவுக்கடிகளாக இருக்கும்-இருக்கவேண்டும்!

மேலும் அவர் இசையைப் பற்றிக் கூறும்போது

“கர்நாடக சங்கீதம் என்றால் தமிழ் சங்கீதமே என்பதால், தமிழ் பாட கர்நாடக சங்கீதம் ஏற்றதே ஆனல் கர்நாடக சங்கீதத்தைத் தமிழில் பாட முடியாதென்றால் அந்தச் சங்கீதம் நமக்கு வேண்டாம். அதைப் பற்றி நாம் கவலைப்படவும் வேண்டாம்.”

என்று அழுத்தந் திருத்தமாகத் தெளிவுப்படக் கூறியிருப்பதும், தமிழ்ப் பண் பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பதும் தமிழிசை வளர்க்கப்படவேண்டிய இன்றியமையாமையை உணர்த்துகின்றன. ஆதிக்க புரியினர் வசம் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் இசை உலகம் அந்த அளவுக்குத் திரும்புமா? திரும்பும், தமிழிசைவாணர்கள் துணிவுடன், உண்மை உணர்ச்சியுடன் முயன்றால்!

நாடகத் துறையில் எவ்வித சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்று நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோமோ, அத்தகைய சீர்திருத்தங்களைத் தோழர் சண்முகம் வலியுறுத்துவது நமக்கு மகிழ்வைத் தருவதாக இருக்கிறது.

“நாடகக் கலையானது காலத்திற்கேற்றவாறு இருப்பதுடன், சாதாரண மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் இருக்க வேண்டும். நாடகங்களும், சினிமாக்களும் புராண மயமாகவே இருந்து வந்துள்ளன. நல்லவேளையாக சில ஆண்டுகளாக இந்தப் போக்கு மாறி வருகிறது. நாடகக் கலை அபிவிருத்தியடைய சாமான்ய மக்களின் வாழ்க்கையை நாடக மூலமாகக் காட்ட வேண்டும்”

என்று அழகுபடக் கூறியுள்ளார். இயல், இசை, நாடகம் மூன்று துறையிலும் தமிழ் மறுமலர்ச்சி அடையவேண்டும் என்பதை அவரது அரிய கருத்துக்கள் தெளிவுபடச் சற்று உறுதியுடன் வெளிப்படுத்துகின்றன. தமிழ்மலர்ச்சி பெறத் தொடங்கிவிட்டது! மலர்ச்சி பெறும் தமிழுக்கு மணம் ஊட்டவேண்டிய பொறுப்பு தமிழக சிந்தனைச் சிற்பிகளின் நீங்காக் கடமையாகும்!

தூத்துக்குடிக்கு என். வி. என். வருகை

21—11—49

தூத்துக்குடியில் நாடகங்கள் நடத்துவது சம்பந்தமாகக் கழகத் தோழர்களோடு கலந்து பேசி, கமிட்டி ஒன்று நிறுவ, அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தூத்துக்குடிக்கு வருகிறார்கள். 21—11—49ம் நாள் மாலை 4-மணியளவில் நடைபெறும் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வார்.

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்
சென்னை.

சென்னை மாகாண முஸ்லீம்கள் மாநாடு

சென்னை மாகாண முஸ்லிம்களின் மாநாடு ஒன்று இம் மாதம் 27-ம் தேதி சென்னை நகரில் கூட்டப்படுமென்றும், அம்மாநாட்டில் அடுத்த அமுலுக்கு வரவிருக்கும் புதிய அரசியலில் முஸ்லீம்களின் வருங்கலத் திட்டம் எப்படி இருக்கவேண்டும் என்பதுபற்றி முடிவு செய்யப்படுமென்றும் தெரியவருகிறது.

இம்மாநாட்டை தோழர் அப்துல் அமீத்கான் கூட்டுகிறாராம். அண்மையில் காங்கிரசில் சேர்ந்த ஐதராபாத் முஸ்லிம் தலைவரான டாக்டர் சையத் அப்துல் லத்தீப் இம்மகாநாட்டு நடவடிக்கைகளில் மிக்கிய பங்கெடுத்துக்கொள்வாரென்று தெரிகிறது. தென்னிந்திய முஸ்லிம்களை காங்கிரசில் சேரச் செய்யும் பெருமுயற்சி நடைபெறுமெனவும் தெரிய வருகிறது.

யாரே மறுக்கவல்லார்!

“நான் அமெரிக்கா சென்று திரும்பியதும், இந்தியாவுக்கு அமெரிக்க மூலதனமும், தொழில் நுணுக்க-ஆயுத-உதவியும் கிடைக்குமென்பதற்கான அறிகுறிகள் தட்டுப்பட்டு ஒளி செய்கின்றனவென்பதை உறுதியாகக் கூறுகிறேன்” என்று பண்டித நேரு 16-ந் தேதி நடந்த பத்திரிகை நிருபர் மாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பித்தலாட்டமே..!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்கிழக்கு ஆசியா— சீனப் பெருநிலம் கம்யூனிஸ்டு நாடாகப் பிரகடனமாய்விட்டது. எங்கும் சிவப்புக்கு அமோக வரவேற்பு, ஆதரவு, அன்பு மரியாதை! பச்சை முதலாளித்துவ நாடுகளின் சர்க்கார் யந்திர ‘கேந்திரப்பகுதி’களிலெல்லாம் கம்யூனிஸ்டுகள் (அதிகாரிகள்) பாலைவனத்தில் பளிங்குமண்டபமாகக் கருதப்படுகிறது சோவியத் ரஷ்யா உலகை இயக்கும் உழைப்பாளி வர்க்கத்தால்! இந்த நிலையில் மெக்நெயில் ‘உலக அபிப்பிராயம்’ சோவியத் ரஷ்யாவுக்கு எதிராக இருக்கிறது என்கிறார். என்ன, துணிச்சல் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிக்கு! பிரிட்டிஷ் மந்திரியின் ‘முழு பூசணிக்காயைச் சோற்றில்மறைக்கும்’ இத் துணிகரக் கூற்று பீதி வழியே முளைத்திருக்கவேண்டுமாகையால், அவரது நிலைமைக்கும் போக்குக்கும் பரிதாபப படவேண்டிய அவசியத்திலேயே இருக்கிறோம்.

சோவியத் ஆட்சியின் சொல்ல வொண்ணாப் போக்கால் உலகின் மன சாட்சியே புரட்சிப் புயலில் சிக்கித்தவிக்கிறதாம். இவ்விதம் கூறி, மன சாட்சி யென்றால் என்னவென்றால் தனக்குத் தெரியாதென்பதை நிரூபித்துவிட்டார் தோழர் மெக்நெயில். உலகின் மனசாட்சி இப்போது புரட்சியால் கொந்தளிக்கவில்லை; பிரிட்டிஷ் மந்திரி எந்த ‘உலகை’ மனதில வைத்துப் பேசுகிறாரோ, அந்த ‘உலகின்’ (முதலாளித்துவத்தின்) மனசாட்சி துறந்த, மன சாட்சிக்கு விரோதமான நடவடிக்கைகளால் உலகப் பாட்டாளி மக்களின் உள்ளத்தில் தான் இப்போது புரட்சியலைகள் மோதுகின்றன. தோழர் மெக்நெயில் கூறும் ‘உலகுக்கு மனசாட்சிகூட இருக்க முடியுமா என்பதே நம் கேள்வி. அப்படி அதற்கொரு மன சாட்சி இருந்து, அம் மன சாட்சிக்குமாறான செயல்களில் அது ஈடுபடாமலுமிருந்தால் ‘ரஷ்யக் கரடி’ நுழையவே வாய்ப்பேற்படாதே! அது ‘சர்வாதிகாரம்’ செய்யவும் அதை மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கவுமான சூழ்நிலையேற்பட்டிருக்காதே. முதலாளித்துவத்தின் கொடுமையிலிருந்தெழுந்ததுதானே ‘ரஷ்யக் கரடி’. இதையெல்லாம் தெரியாதவரல்லர்மெக்நெயில் தெரிந்திருந்தும், சில பல சிந்தனையற்றச் சொற்களைச் சிக்கனமின்றிக் கொட்டுவானேன்? அதில்தான் அடங்கிக் கிடக்கிறது, ஏகாதிபத்தியத்தின் தத்துவம்! பித்தலாட்டமே, உன் பெயர் தான் ஏகாதிபத்தியமா?

சர்வாதிகார ஆட்சிப்பீடம் தன் கொடுமைகளையும் தீமைகளையும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும், ஏன், உலகின் எல்லாப் பகுதிகளிலும் திணித்து வருகிறதென்று ‘முகாரி’ பாடியுள்ளார்; உலக நாடுகள் நாளுக்குநாள் ரஷ்யாவோடு தங்கள் உறவைக் குறைத்துக்கொள்ளப் போகின்றனவென்று ‘பூச்சாண்டி’ காட்டியுள்ளார் உடைமையைப் பொதுவாக்குவது கொடுமையாம்! சமதர்மம வேண்டுமெனபது;தீமையாம்! முதலாளித்துவத்தின் ‘அகராதி’யில் ‘கொடுமை’ என்பதற்கு இதுதான் பொருள் போலும்! ஜனநாயகம், உலக சமாதானம் என்ற பெயரில் ஏகாதிபத்திய நாடுகள் புரிந்து வரும் அட்டூழியங்களைப்புரிந்த நமக்கு ஏகாதிபத்தியப்பிரதிநிதி தரும் இந்த விளக்கம் எந்த வகையிலும் ஆச்சரியமூட்டவில்லை. அதற்குமாறாக யதேச்சாதிகார வல்லரசுகளுக்கு அழிவு காலம் கிட்டுகிறதென்பதற்கான அறிகுறிகள் இவையென உணரும் போது உள்ளபடி உவகையே வந்துறுகிறது. உலகம் சிவப்பாக மாறிக்கொண்டிருக்கிற காலத்தில், பொதுவுடமைப் பாதை கரடு முரடான இடங்களிலெல்லாம் இலேசாக நிறுவப்பெற்றுவரும் காலத்தில, மக்கள் விழிப்புணர்ச்சிபெற்றுவிட்ட காலத்தில், புழுவையும் போரிடவைக்கும் புதுதுணர்வு பரவிவரும் காலத்தில் ஏகாதிபத்திய ஜான்புல்களும் முதலாளித்துவ வல்லூறுகளும் பூச்சாண்டி காட்டுவதால் எச்துணையும் நன்மையில்லை. அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டவர்களாகத்தான் ஆவார்கள்; விரைந்தோடி வரும் புத்துலகத்துக்கு வேண்டாதவர்களாகத்தான் கருதப் படுவார்கள்.

ஜலகண்டபுரம் அ. ப. அர்த்தனாரி அந்தோ மறைந்தார்!

16—11—49 காலை 10·30 மணிக்கு ஜலகண்டபுரம், சுயமரியாதைத் தொண்டர் அ. ப. அர்த்தனாரி அவர்கள், ஆஸ்த்துமா என்ற வியாதியால் பீடிக்கப்பட்டு உயிர் துறந்தார் என்ற துக்கச் செய்தி கேட்டு மிக வருந்துகிறோம்.

தோழர் அர்த்தனாரி அவர்கள் ப. கண்ணன் அவர்களின் உடன் பிறந்த ஒரே சகோதரர் ஆவார். சுயமரியாதை இயக்கம் ஆரம்பமான கால முதல் இன்று வரை, சுயமரியாதைக் கட்சியிலும், திராவிட இயக்கத்திலும் மிகுந்த பங்குகொண்டு, ஒரே கொள்கையில் உறுதியுடன் இருந்து வந்தவர். சுயமரியாதை இயக்கம் ஆரம்பமான காலத்து, கட்சியில் உள்ள பல தலைவர்களின் உருவ பேட்ஜுகளைச் செய்து மாநாடுகளில் விநியோகம்செய்து கட்சியைப் பரப்பினவர். இயக்கப் பத்திரிகைகளின் திறமை வாய்ந்த ஏஜண்டுமாவார்.

சுயமரியாதை உலகுக்கும், திராவிட சமுதாயத்திற்கும், முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் அவரது பிரிவு ஈடு கட்டமுடியாத நஷ்டம் என்றே சொல்லலாம்.

சீர்திருத்தப் பாதை, என்று வகுக்கப்பட்டதோ அன்று முதல், இன்று அவர் மறையும் வரை, ஒரு சிறிதும் மாறுபாடின்றி நேரே சென்றுவந்த சீரிய செம்மல், மறைந்துவிட்டனர்.

அவரது பிரிவால் கலங்கும், அவரது குடும்பத்தாருக்கும், குறிப்பாக, தோழர் ப. கண்ணன் அவர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(ஆ-ர்)

மனித வர்க்கம் முன்னேற காலனி ஆட்சிமுறை ஒழியவேண்டும்

அரசியல் பொருளாதார அடிமைத் தனம் ஒழிய அதுவே அடிப்படை

ஊருக்கு உபதேசம் செய்கிறார் ட்ருமன்

"அரசியல் அடிமைத் தனமும் பொருளாதார சுரண்டலும் பழைய காலனி முறையில் உள்ளன. ஆகவே பின்தங்கிய நாடுகளின் அபிவிருத்திக்கு இந்தக் காலனி முறை பயன்படாது"

என்று அமெரிக்கத் தலைவர் தோழர் ட்ருமன் வஷிங்டனில் நடைபெற்ற நீக்ரோ மாதர் மாநாட்டில் பேசியபோது குறிப்பிட்டார்.

காலனி ஆட்சி என்ற முறையிலே எங்கோ இருக்கும் ஒரு நாடு வேறு எங்கோ இருக்கும் மற்றொரு நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்திவரும் கொடுமை பல நூற்றாண்டுகளாக நிலவி வருகிறது. உலக மக்கள் அறியாமையில் ஆழ்ந்து கிடந்த அந்த நாட்களில் வலியோர் எளியோரை அடக்கி ஆண்ட முறைகளில் இந்தக் காலனி முறையும் ஒன்று. இப்படிப்பட்ட பொல்லாத முறையின் விளைவை இன்றைய தினம் ஆசிய நாடுகள் பல அனுபவித்து வருகின்றன. டச்சு அரசியலாரின் காலனி ஆட்சியால் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட இடர் இன்னமும் தீர்ந்தபாடில்லை. இந்தோ-சீன பிரஞ்சு ஆட்சியின் கீழிருந்து படும் அல்லல் சொல்லுந்தரமன்று. அதுபோலவே, தென்னாப்பிரிக்காவிலும் வெள்ளையர் ஆட்சியால் அந்நாட்டுப் பழங்குடி மக்களும், அங்கு குடியேறியுள்ள இந்திய மக்களும் படும் வேதனை எவ்வளவு என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. தென்னாப்பிரிக்கப் பிரச்னை ஐ. நா. சபைக்குத் தலைவலியை உண்டுபண்ணும் அளவுக்குச் சிக்கலாயிருப்பதே இதற்குப் போதிய எடுத்துக் காட்டாகும்.

இவை மட்டுமின்றி இந்தியாவிலும் பிரஞ்சிந்தியப் பகுதிகள் இன்னமும் விடுதலை பெறாமல் வேதனைப்படுகின்றன. இதனால் இந்திய யூனியன் அரசியலாருக்கும், பிரஞ்சிந்திய அரசியலாருக்குமிடையே, வீணான மனமாச்சரியங்கள் ஏற்படுகின்றன. பிரஞ்சிந்திய பகுதிகளில் வாழும் மக்களிடையே கட்சிப் பிளவும் கலகங்களும் ஏற்பட்ட வண்ணமிருக்கின்றன. இங்ஙனம் உலகில் ஆங்காங்கு பல நாடுகள் அல்லற்பட காரணமாயிருக்கிறது இந்தக்காலனி ஆட்சி முறை. அது மட்டுமின்றி பழைய காலனி ஆட்சி முறையால் மக்கள் அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் கொஞ்சமும் முன்னேற முடியாமல் அடிமைகளாய் வாழுகின்றனர். காலனி முறையால் உலகில் அடிமைத்தனம் வளர்ந்ததைத் தவிர வேறு எந்த நற்பலனும் விளைந்தபாடில்லை.

எனவே, பின்தங்கிய நாடுகள் முன்னேறவேண்டுமானால், முதலில் இந்தக் காலனிமுறை ஒழிய வேண்டுவது அவசியமும் அவசியமுமாகும். இதைத்தான் தோழர் ட்ருமன் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் பேசுகையில், உலகில் பல்வேறு பகுதிகள் சுதந்திரம் [illegible] நாட்டைப் பாராட்டியும் இருக்கிறார். இங்ஙனம் காலனி ஆட்சியால் ஏற்படும் இன்னல்களை விளக்கி, அது ஒழிக்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்தி, சுதந்திரம் பெற்றுவரும் நாடுகளைப் பாராட்டியிருக்கும் தோழர் ட்ருமன்தான் இன்றைய தினம் உலகம் முழுவதும் அமெரிக்காவின் டாலர் ஏகாதிபத்தியத்தின் கீழிருக்கவேண்டும் என்று கருதுகிறார். அதற்காகத் தன்னாலியன்றதையெல்லாம் செய்கிறார். சமதர்மக் கொள்கையையே சாடுகிறார். இப்படிச் சொல்வேறு செயல் வேறாக நடக்கும் அவர், காலனி ஆட்சியை வெறுக்கிறார் என்றால், அது ஆச்சரியத்துக்குரிய செய்தியேயாகும்.

உலகையே கட்டியாள நினைக்கும் ஒரு தலைவர், இங்ஙனம் சுதந்திரம் பற்றி இனிக்க இனிக்கப் பேசுவதன் அந்தரங்கம் தான் என்ன என்பதைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், தோழர் ட்ருமனின் இந்தப் பேச்சு இராஜ தந்திரத்தின்பாற்பட்டதென்றே சொல்லவேண்டும். அப்படியின்றி உண்மையிலே உலக மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் அவருக்கிருக்குமானால் அமெரிக்கா முக்கிய அங்கம் வகிக்கும் ஐ.நா. சபை தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னையில் உடனே ஒரு தெளிவும், இந்தோ-சீனாவில் மக்கள் விடுதலைப் போரில் வெற்றியும், மற்ற காலனி நாடுகளின் கவலை தீருதலும் ஆகிய பலன்கள் கிட்டும்படியாகச் செய்யவேண்டும். இதனைச் செய்யாதவரையில் அவர் ஊருக்குச் செய்யும் உபதேசம் உருப்படியான எந்த பலனையும் தராது என்பது திண்ணம்.

இன்றைய :: :: நாடகங்கள்!

"நாடகக் கலை அரும்பெரும் கலை. அதை அபிவிருத்தி செய்யவேண்டும். தென்னிந்தியாவில் நாடகக் கலை சரியான வழியில் அபிவிருத்தியடையவில்லை. பாமர மக்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பதே சரியான முறையாகும். ஆனால் இன்று நாம் பார்க்கும் நாடகங்களோ புராண இதிகாச கதைகளை வைத்து தயாரிப்பதாக இருக்கின்றன."

ஆர். கே. சண்முகம்
16—11—49

சக்கரம் பொறித்த புதிய நோட்டுகள்

அசோகச்சக்கரம் பொறிக்கப்பட்ட புதிய கரன்ஸி நோட்டுகள் இந்திய ரிசர்வ் பாங்கின் எல்லாக் கிளைகளினின்றும் 1950-ஜனவரி 26-ந்தேதியன்று வெளியிடப்பெறுமென்று தெரிகிறது. புதிய நோட்டுகளின் நீள—அகலம் பழைய நோட்டுகளைப் போன்றதேதானிருக்குமென்றும், ஆனால் கண்கவர் வகையில் அச்சிடப்படுமென்றும் கூறப்படுகிறது. இங்கிலீஷ், இந்தி எழுத்துக்கள் மட்டுமே நோட்டுகளில் பொறிக்கப்பட்டிருக்குமாம்.

பருத்தி நெசவுத் துணிகளைத் தபாலிலும் அனுப்பலாம்

இந்திய யூனியனுக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு எந்த அளவுக்கு வேண்டுமோ துணி அல்லது நூலை தபால் மூலம் அனுப்பி வைக்கலாமென்றும், இதுவரை தபாலில் அனுப்புவதின் மீதிருந்து வந்த தடை ரத்துசெய்யப்படுகிறதென்றும், பருத்தி நெசவுத்துணிகள் போக்கு வரத்து தாராளமாயிருக்க வேண்டுமென்பதற்காகவே இப்புதுமுறை கையாளப்படுகிறதென்றும் இந்திய சர்க்காரின் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

பயனுள்ள யோசனை கூறும் தொழிலாளிக்குப் பரிசு

(0)

சென்னை சர்க்கார் ஏற்பாடு

"அரசாங்க தொழில்நிலையங்களில் வேலை செய்யும் ஊழியர், அந்நிலையங்களில் தயாரிக்கப்படும் பொருள்களைக் குறைந்த செலவிலும், அதிகமாகவும் தயார் செய்யக்கூடிய உருப்படியான யோசனைகளைக் கூறினால் அவர்களுக்குநல்ல பரிசளிக்கப்படும்"

என்று சென்னை அரசியலார் ஒரு திட்டம் தயாரித்திருக்கின்றனராம். இத்திட்டத்தில் 6 அரசாங்கத் தொழிற்சாலைகள் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. 1949—50 ஆம் ஆண்டில் இந்தப் பரிசுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மூவாயிரம் ரூபாயாம்.

அரசியலாரின் இந்த அழகான திட்டத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால், இங்ஙனம் பரிசளிப்பதாக அரசா[illegible] தொழிலாளியிடமிருந்து தொழில் நுணுக்கங்களை அறிய விழையும் அரசியலார், தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் இத்தகைய ஏற்பாடு எதையும் செய்யாதிருப்பது ஏன் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. "நல்ல யோசனை கூறுவோருக்கு நல்ல பரிசளிப்போம்" என்று பறைசாற்றும் அரசாங்கம், நல்ல பணியாற்றும் தொழிலாளருக்கு நல்ல வாழ்வளிக்க இன்ன திட்டம்செய்தோம், செய்கின்றோம், செய்வோம் என்று இதுவரை இயம்பியதில்லையே. தொழிலாளி இன்றும் அன்றிருந்த நிலையில்தானே இருக்கின்றான். அவனது ஊக்கம் அதிகரித்து அவனது உழைப்பால் நாடு நலன் பெறச் செய்ய என்ன பரிசுத்திட்டம் வகுத்துள்ளது இந்த அரசாங்கம் என்றே கேட்கத்தோன்றுகிறது.

ரஷ்யா ஜெர்மனியல்ல; ஸ்டாலின் ஹிட்லரல்லர்

ஆக்கிரமிப்பல்ல; அமைதியே அதன் நோக்கம்

ரஷ்யா பற்றி லார்ட் வேவல்

தேசீயவாதிகளுக்கு அர்ப்பணம்!

ஹிட்லரின் ஜெர்மனியுடன் இன்றைய ரஷியாவை ஒப்பிட்டுப் பேசுவது தவறு. ரஷியாவுக்குப் போதுமான நிலவசதிகள் உள்ளன. அவர்கள் பிறநாட்டைக் கைப்பற்றித்தான் வாழவேண்டும் என்கின்ற நிலைமையில் இல்லை என்றே நான் நினைக்கிறேன். ஐரோப்பா முழுவதையும் கட்டியாளும் சக்தி அவர்களுக்குக் கிடையாது. நாடு பிடிக்கும் ஆசை அவர்களுக்கு இருக்கிறது என்று நான் நம்பவில்லை"

என்று இந்தியாவின் முன்னாள் வைஸிராய் லார்ட்வேவல் ஒட்டாவாவில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

லார்ட்வேவல் அகில உலக அரசியலில் எந்த முகாமைச் சேர்ந்தவர் என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. அவர் பெயருக்கு முன்னால் அமைந்துள்ள 'லார்ட்' என்னும் பட்டமே அவர் முதலாளித்வத்தின் பிரதிநிதி என்பதை தெள்ளிதிற் புலப்படுத்தும். அப்படிப் பட்டவரே சொல்லுகிறார் ரஷியாவுக்கு நாடு பிடிக்கும் ஆசை கிடையாது என்று. தோழர் வேவல் இங்கு நாடு பிடிக்கும் ஆசை என்பதை விளக்கும் போது 'Physical aggression' அதாவது, 'நேரிடையாகப் பிற நாட்டை ஆக்ரமித்து தாமே ஆளவேண்டும் என்ற எண்ணம்' என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

ரஷியா, தனது பொதுவுடமைக் கொள்கை அகில உலகிலும் பரவ வேண்டும் என்று விரும்புகிறது. அவ்வண்ணமே அக்கொள்கையும் அமைதிக்கேற்றபடி எங்கும் பரவி வருகிறது. இதைக்கண்டு முதலாளித்வ நாடுகள் தமது சுகபோகங்கள் தகர்ந்துவிடுமேயென்று அஞ்சுகின்றன. அந்த அச்சத்தால் ரஷியா மீது பொருந்தாக் குற்றச்சாட்டுகளைச் சுமத்த ஆரம்பித்திருக்கின்றன. அவற்றுள் ரஷியா நாடு பிடிக்கும் ஆசைகொண்டலைகிறது என்பது முக்கியமானது.

முதலாளித்வ நாடுகளின் இத்தகைய குற்றச்சாட்டை மறுத்துக் கூறும் முறையிலே "அமைதியே எமது குறிக்கோள். அணுசக்தி எம்மிடம் இருப்பினும் அதனை ஆக்க வேலைக்கே பயன்படுத்துவோம்" என்று அடிக்கடி சொல்லி வருகிறது ரஷியா. இங்ஙனம் தனது உள்ளத்தில் கள்ளமில்லை என்பதை அடுத்தடுத்து ரஷியா தெளிவுபடுத்தியபோதிலும் தெளிவு பெறாத மேற்கத்திய நாடுகளும், நம்நாட்டுத் தேசியவாதிகள் பலரும் ரஷியாவை ஜெர்மனியாகவும், அந்நாட்டுத் தலைவர் தோழர் ஸ்டாலின் அவர்களை ஹிட்லராகவும் சித்தரித்துக்காட்டி மக்களை ஏமாற்றும் பணியைக் கைவிட்டதேயில்லை. அப்படிப்பட்ட அரசியல் பித்தலாட்டக்காரர்களுக்கு முதலாளித்துவ தோழர் வேவலின் மேற்கண்ட பேச்சுகளை அப்படியே அர்ப்பணம் செய்ய விரும்புகிறோம்.

ரஷியாவின் உள்ளக்கிடக்கை இன்னதென்பதை லார்ட் வேவல் மட்டுமே உணர்ந்திருக்கிறார் என்று சொல்லுவதற்கில்லை. மேற்கத்திய லார்ட்கள் அத்தனைபேருக்கும் இது தெரியும். ஆனால் அவர்களெல்லாம் உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி உரைக்காமல், உண்மையை மறைத்துப் புறமொன்று பேசுகின்றனர். அப்படியின்றி, எக்காரணம் பற்றியோ தன்னையும் அறியாமல் உள்ளதை உள்ளபடியே உரைத்துவிட்டார் தோழர் வேவல்.

எனவே, வேவலின் பேச்சை வெறும்பேச்சு என்று எண்ணிவிடாமல் அதையே தலைக்கோலாகக் கொண்டு இன்றைய ஐரோப்பிய அரசியலை எடைபோட்டுப்பார்க்க வேண்டுவது அரசியல் அறிஞர்களின் இன்றியமையாக் கடனாகும். இதைவிடுத்து சுயாலத்தைத் துணைகொண்டு ரஷியாவைஜெர்மனியாகவும், தோழர் ஸ்டாலினை ஹிட்லரைப்போன்ற ஒரு சர்வாதிகாரியாகவும் மக்களிடையே சித்தரித்துக் காட்டினால் உலக அமைதிக்கு பங்கம் நேரிடக்கூடும்.

இதேசமயத்தில் மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறோம். மேற்படி பத்திரிகை நிருபர்களிடம் பேசிய தோழர் வேவல் இந்தியாவைப் பற்றியும் ஒரு சில சொல்லியிருக்கிறார். அதாவது இந்தியா-பாகிஸ்தான் தகராறு வளராமல் தடுக்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது என்று கருத்துப்பட பேசியிருக்கிறார்.

"மற்றொரு உலகப் போர் மூளுமானால அதில பாகிஸ்தானான ராஜதந்திர முக்கியமான பங்குபெறும். அததகைய ஆற்றல வாய்ந்தது பாகிஸ்தான என்பதை நாம் நினைவூட்டிக் கொள்ளவேண்டும்."

என்று பேசியிருக்கிறார் அவர். இதனைக் குறிப்பாக நமது தேசியவாதிகளுக்கு அர்ப்பணம் செய்கிறோம். தமது பிடியிலிருக்க சம்மதியாமல் விலகிவிட்டது என்ற ஒரே காரணத்தைக்கொண்டு முக்கியமான ஒரு சகோதர நாடு என்பதையும்மறந்து பாகிஸ்தானை அளவுக்கு மீறி இழித்தும் பழித்தும பேசி, எழுதிவரும் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் பாகிஸ்தானின் சக்தி எத்தகையது என்பதை தோழர் வேவலின் பேச்சைக் கேட்டப் பிறகேனும் உணர்வார்களாக; உணர்ந்து அமைதிக்கும்,நல்லுறவுக்கும் வழிகோலுவார்கள் என்று நம்புகிறோம், உலக அமைதியை நாம விரும்புகின்ற காரணத்தால்.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண் குறிக்காமல் எழுதினால் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர், 'மாலைமணி'

நாங்களும் ஏகலைவர்களல்லர் ஏமாளிகளாயிருக்க! அவரும் துரோணாச்சாரியார் அல்லர் கற்றுக்கொடுக்க!

உலகம் தெரியா மக்கள் : காக்கத் தெரியா மந்திரிகள் : கவலைப்படாத கடவுள்கள் !

இம் மூன்றும் எங்கள் கவலைக்குரிய பொருள்கள் !

சேலத்தில் தோழர் டி. கே. சீனிவாசன்

[13—11—49ல் சேலத்தில் நடைபெற்ற மாபெருங் கூட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு]

"எங்கேயோ பிடித்த தீ இடையிலே காடு இருந்த காரணத்தால், சுற்றிச் சுற்றிச் சூழ்வதைப் போல, தோட்டத்திலே மலர்ந்த முல்லை தென்றலில் கலந்து வந்து சுற்றிலும் மணம் பரப்புவதைப் போல, பெரியார் பொருந்தாத் திருமணத்தினால் நாங்கள் விலகித் துவக்கிய திராவிட முன்னேற்றக் கழகம், பண்பட்ட உள்ளமும் பகுத்தறிவும் நாட்டில் பலரிடத்தில் இருப்பதால், வேகம் வேகமாக வளர்ந்து வருகிறது.

தணலில் தங்கம்

புதுக்கட்சிதோன்றிவளருவதற்குள்ளத்தனை எத்தனையோ இடர்கள், தொல்லைகள் ஏற்படும். மற்ற கட்சிகளுக்குஅத் தொல்லைகள் சற்று நலிவைத் தரும். ஆனால் நாங்கள் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஏற்படும் தொல்லைகளே, அதை வளர்த்து வருகின்றன. அரசாங்கத்தின் கடுமையான பாணங்கள், மாற்றுக் கட்சித் தலைவர்களின் மட்டரகமான பிரச்சாரம், நாங்கள் விட்டுப் பிரிந்த தலைவரின் விடாப்பிடியான இழி முயற்சி இவை மூன்றிலேயும் எங்கள் கழகம் தணலில் தங்கமாக ஒளி விடுகிறது.

சுப்பையாவுக்குப் பூரிப்பு ஏன் ?

'மணியம்மை திருமணத்தோடு 'திராவிடர் கழகம்' அழிந்துவிட்டது' எனக் கூறி பூரிப்படைகிறார் தோழர்சி.பி. சுப்பையா. நாங்கள் அழிந்து போவது சுப்பையாவுக்கு ஏன் இவ்வளவு மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும்? சி. பி. ராமசாமிஐயர் மகிழ்ந்தால் அதில் அர்த்தமிருக்கிறது. எங்கள் வளர்ச்சி ஐயர் என்ற வாலை நறுக்கிவிடும். ஆனால் சி. பி. சுப்பையாவுக்கு அதனால் என்ன லாபம்? சி. பி. சுப்பையாக்கள் மனிதர்களாக உலவுவதற்கு, தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நிற்பதற்கு, இன்று மேடையில் பேசும் அளவுக்கு துணிச்சலும், ஆற்றலும் பெறுவதற்குக்காரணமாயிருந்தவர்கள் நாங்கள். நாங்கள் இல்லாவிட்டால் சி. பி. சுப்பையாக்கள் அரசியலில் தலைவர்களாக உலவ டில்லியும், டமாரமும், மாம்பலமும், திருவல்லிக்கேணியும் இடந்தருமா?

தலைவரல்ல ஏமாளியாக !

காமராஜர் கட்ட விரலை வெட்டிக்கேட்கிறார் எங்களிடத்திலேயிருந்து. நாங்கள் ஒன்றும் ஏகலைவர்களல்ல ஏமாளிகளாயிருக்க! காமராஜரும் எங்களுக்குத் துரோணாசாரியாராக எப்போதும் இருந்ததில்லை. அவருக்கு அந்த மமதையையும் அகங்காரத்தையும், இன்றுள்ள மந்திரிமார்கள் கொடுத்து விட்டார்கள். அவர் சுற்றுப்பிரயாணம் செய்யும்போதெல்லாம், கச்சேரி செய்யப்போகும் பெண்ணுக்குப் பின்னால் காப்பி கூஜா தூக்கிச் செல்லும் ஆளைப் போல யாராவது ஒரு மந்திரி போய்க்கொண்டே இருக்கிறார். மந்திரியாயிருப்பவர் போகாவிட்டாலும், இருந்து அந்த இடத்தைக்காலி செய்தவர் போகிறார். இருப்பவரும்இருந்தவரும் போகாவிட்டாலும், இருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்போகிறார். இந்நிலையில்அவர்ஒரு 'ஹிட்லராக' ஆகவேண்டும் என்று ஆசைப்படுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?

தேர்தல் பயம் !

எங்களை ஒழிப்பதில் இவர்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை ? தேர்தல் பயந்தானே ! எங்களைத் தூற்ற செலவிடும் நேரத்தை, உழைப்பை, பணத்தை, அறிவை மக்களுக்கு நல்வாழ்வளிக்க பயன்படுத்தினால் இந்தப் பயம் இல்லாதிருக்குமே ! லால்குடியில் தோதல் என்றால் ஐந்து மந்திரிகள் வருகிறார்கள், பஞ்ச பாண்டவர்கள் பாஞ்சாலியைத் தேடிப் போனதைப் போல. மந்திரிக்கு இதுதான வேலையா? அப்படித்தான் பாஞ்சாலியைப் பாதுகாக்க இவர்களால் முடிந்ததா? யாரோ இடையிலே இருந்த துரியோதனன் துயிலுரியத்தான் செய்தான் !

என்றும் இருந்த உழைப்பு

மணியம்மை திருமணம் இன்று முற்போக்குள்ள இளைஞர்களின் கூட்டு சக்தியை உண்டாக்கி இருக்கிறது. பிரச்சாரம் செய்து செய்து அலுத்துப்போயிருந்த தோழர் அண்ணாத்துரை, ஒரு நாளொன்றுக்கு ஆறு கூட்டங்களில் பேசுகிறார். பிரச்சாரம் செய்யாத நாளே கிடையாது. இந்த உழைப்பு இப்போதுதான் உண்டானதல்ல. ஏற்கனவே இருந்ததுதான். ஆனால், தலைவர் எங்களைத் தகுந்தபடி பயன் படுத்தாததால் எங்கள் உழைப்பு மதிக்கத்தக்கதாயில்லை. இன்று ஒரு மாத காலத்தில் 303 கிளைக் கழகங்கள் ஏற்படுத்தி யிருக்கிறோம்.

நல்வாழ்வே குறிக்கோள்

எங்களிடத்திலே உள்ள, எந்தச் சிறப்பு கதர்ச்சட்டைப் போட்டிருந்தவர்களைக்கூட எங்களை நோக்கி இழுக்கிறது? எங்கள் மனதிலே உள்ள புனிதத் தன்மை! பள்ளியில்படிக்கும்போது ஏட்டில் ஒற்றுமையைக் கண்டோம். படித்து முடிந்தவுடன் நாட்டிலே பேதமும் பிளவும் கண்டோம். ஏட்டிலே பீமனைப் பார்த்தோம், நாட்டில் சாரற்ற சக்கைகளைப் பார்த்தோம். ஏட்டில் ரம்பையும், மேனகையும், திலோத்தமையும், ஊர்வசியும் நடமாடக் கண்டோம். நாட்டில் ஒட்டிய வயிறும் உலர்ந்த உடலுங்கொண்ட கோரஉருவங்களைப் பார்த்தோம். ஏட்டில் குபேரப் பட்டினத்தைப் பற்றிப் படித்தோம். நாட்டில், குசேலர் குடிசைகளே நிறைந்திருக்கப் பார்த்தோம் இந்தப் பேதத்தால் ஏற்பட்ட கலக்கந்தான் எங்களைப் பொது வாழ்வில் இழுத்துவிட்டது. ஆகையினால் தான் போட்டி, பொறாமை, சூது, வஞ்சனை இவைகளில் எங்கள் மனம் செல்லவில்லை. பேதத்தை ஒழிப்பது, மக்களுக்கு நல்வாழ்வை அளிப்பது இரண்டிலுமே கவனஞ் செலுத்துகிறோம். எங்கள் கழகமும் வளருகிறது.

உலகந் தெரியாத மக்கள், அவர்களைக் காக்கத் தெரியாத மந்திரிகள், இவர்களைப்பற்றிக் கவலைப்படாது எங்கோ இருந்து, என்னவோ செய்து கொண்டிருக்கும் கடவுள்கள் இவை மூன்றுந்தான் எங்கள் பார்வையில் படுகின்றன. பணம் ஒரு பக்கம் குவிகிறது. இல்லை என்ற ஏக்கம் நிறைந்த சோக ஒலி எல்லாத் திசைகளிலிருந்தும் கேட்கிறது. இதுகவுளுக்கும் கேட்கவில்லை, காங்கிரஸ் சர்க்காருக்கும் கேட்கவில்லை, எங்களுடைய காதுகளில்மட்டுந்தான்கேட்கிறது.

நன்மந்திரி— துன்மந்திரி

பட்டேல் பேசியிருக்கிறார், "அரசாங்கத்தின்கவனத்துக்கு வராது பதுக்கிவைத்திருக்கும் பணத்தை எப்படிச் சமாப்பிப்பது என்றபயத்தால்மறைத்து வைத்திருக்கிறார்கள் கள்ள மார்க்கெட்காரர்கள். ஆகையினால்தான் மூலதனம் இல்லாமல் இருக்கிறது" என்று. ஆனால் நேரு அமெரிக்காவில் பேசி யிருக்கிறார், "பணம் மூலதனமாகப்போட்டுஉபயோகப் படுத்தத்தெரியாத மக்களிடத்தில் சிக்கியிருக்கிறது. ஆகையினால்தான் அமெரிக்க மூலதனம் தேவைப்படுகிறது" என்று. இதில் எது உண்மை? நேரு முதன் மந்திரி. பட்டேல் உதவி மந்திரி. இரண்டு பேருமே வெவ்வேறுகாரணங்களைக் கூறுகிறார்கள், பழைய காலத்து ராஜசபையில் நன் மந்திரியின் கருத்துக்கு முரணாகவே துன்மந்திரியின் கருத்து இருப்பதைப் போல !

சட்டம் எதற்குப்பயன் படுகிறது?

பட்டேல் பேச்சு எதை உணர்த்துகிறது? எந்தக்கள்ளமார்க்கெட்காரர்களைத் தூக்கிலேற்றப்போவதாக ஜவஹர்லால் நேரு இரண்டு வருடங்களுக்கு முன்னால் சொன்னாரோ, அந்தக் கள்ளமார்க்கெட்காரர்கள் இன்றும் உயிருடன் தான் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் பணம் பதுங்கியிருப்பது அரசாங்கத்துக்குத் தெரிகிறது. ஆனால் ஏதும் செய்ய முடியவில்லை. சட்டமும், தண்டனையும், சிறையும், போலீசும் மாற்றுக்கட்சிகளை அடக்கி ஒடுக்கத்தான் பயன்படுகிறதே ஒழிய, பணத்தைப் பதுக்கிவைக்கும் பாதகர்களை ஏதும் செய்ய வில்லை. அவர்களைக் கெஞ்சுகிறார்கள். அறிவுரை சொல்கிறார்கள் அந்தக்கயவர்களுக்கு. ஏழைகளின் பிரதிநிதிகளாக பதவிக்குச் சென்றவர்கள், சீமான்களின் எடுபிடி ஆட்களாகவா இருப்பது?

இதை திராவிட முன்னேற்றக்கழகம் கண்டிக்கிறது. அவர்கள்மேல் உள்ள வெறுப்பாலோ, அந்தப்பீடத்தின் மேல் உள்ள ஆசையாலோ அல்ல. தியாகத்தையும் உழைப்பையும், முதலாளித்துவத்தின் காலடியில் காணிக்கையாக வைத்துவிட்டார்களே என்ற வருத்தத்தினால் தான்.

பொதுவாழ்வைப் புனிதமாக்குகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகத்தில், பொதுவாழ்வைப்புனிதம் நிறைந்த தொண்டு என்று நினைக்கும் எல்லோருக்கும் இடம் உண்டு. இன்றைய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் இதில் சேரலாம். அவர்கள் இதில் சேருவதில் இரண்டு பழிச்சொற்கள் அவர்களை விட்டு நீங்கும். ஒன்று, 'ரஷ்யாவின் ஏஜண்டுகள்'' என்பது. இரண்டாவது, "பலாத்காரத்தில் ஈடுபடுபவர்கள்'' என்பது. எங்களுக்கும் இந்த இரண்டுக்கும் எந்தவிதத்தில் தொடர்பு மில்லை!

அரசாங்கம் கம்யூனிஸம் ஒரு வியாதி என நினைத்து வைத்தியஞ் செய்கிறது. ஆனால்உண்மை அதுவல்ல, வியாதிமுதலாளித்துவம். அதற்கான மருந்து தான் கம்யூனிஸம். எங்கள் மருந்தும் அதுதான. கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள்மருந்தைப் பக்குவமாகத் தயாரிக்கத் தெரியாமல், கொஞ்சம் நெடியேறும்படி தயாரித்து விட்டார்கள். நாங்கள் நெடியேறுதபடி தயாரித்திருக்கிறோம். ஆகையால் மருந்தைப் பொறுத்த வரையில் கம்யூனிஸ்ட் — திராவிட முன்னேற்றக் கழக வைத்தியர்களிடத்தில் பேதம் ஒன்றுமில்லை.

அடுத்து நம்முடைய சோஷலிஸ்ட் கட்சித் தோழர்கள், அவர்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணனை நம்புகிறார்கள். ஜெயப்பிரகாஷ் அரவிந்தரையும், ரமணரையும் நம்புகிறார். ரமணரும் அரவிந்தரும், ஆண்டவனை நம்புகிறார்கள். ஆண்டவன் யாரை நம்புகிறாரோ நிச்சயமாகச் சொல்ல முடியாது. மக்குத் தெரிந்தவரையில் அர்ச்சகரை நமபுகிறார். அர்ச்சகர் பக்தர்கள் மடியை நமபுகிறார். இந்த நம்பிக்கைச் சங்கிலி நீண்டு கொண்டே போகிறது. இந்த நிலை, அவர்கள் எங்களோடு சேர்ந்து பணியாற்றினால நீங்கிவிடும். ஆகையால மக்கள் முன்னேற்றத்தை மட்டும் கருத்தில் வைத்துப் பணியாற்றும் எவருக்கும் எங்கள் கழகத்தில் இடமுண்டு. அழைக்கிறோம். வாருங்கள் !"

நீங்கள் "மாலை மணி"க்கு சந்தாதாரராக சேர்ந்துவிட்டீர்களா ?

உடனே உங்கள் பெயரை சந்தாதாரராகப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

தோழியர் காந்திமதி தாய்நாடு திரும்பினார்

சிதம்பரம், நவ. 15—

சிதம்பரம் தோழியர் சி. டி. காந்திமதி எம். ஏ. பி. டி. (தோழர் என். தண்டபாணி பிள்ளை மகள்) சென்ற 1947 அக்டோபரில் அரசியலாரின் உதவிச்சம்பளம் பெற்று இங்கிலாந்து சென்று இரண்டாண்டுகளுக்கு மேலாக இலண்டன் பல்கலைக் கழகத்தில்கல்வி பயின்று, ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, தம் கல்வியையும் முடித்துக்கொண்டு இம்மாதம் 10-ஆந்தேதி புறப்பட்டு 12-11-49 காலை விமானம் மூலம் பம்பாய் வந்திறங்கினார். அன்று மாலை அங்கிருந்து புறப்பட்டு, 14ந்தேதி சென்னை வந்து, அன்று மாலை சிதம்பரம் வந்து சேர்ந்தார்.

தம் உடல் நிலை காரணமாக இன்னும் இரண்டு வாரங்களுக்குத் தம் பெற்றோர்களோடு சிதம்பரத்திலேயே தங்கும்படி டாக்டர்கள் கூறியிருப்பதால், வேறு எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் சிறிது காலத்திற்குக் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துவதாகவும், தம்மை வரவேற்று, வாழ்த்துக்கள் அனுப்பியோருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அறிவிக்கிறார். (ஒ-சி)

செங்கற்பட்டில் பயிர்கள் சேதம்

பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தால், செங்கற்பட்டு மாவட்டத்தில் விளைந்திருந்த பயிர்களுக்கெல்லாம் பெருஞ்சேதமேற்பட்டு விட்டதென்பதாக, செங்கற்பட்டு கலெக்டர் தெரிவிக்கிறார். மதுராந்தகத்தில் இப்பருவத்தில் குளங்களில் தண்ணீரே இல்லை. எனவே விதைப்பு வேலை கூடத் துவக்க முடியவில்லை யென்று குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை நகர் போலீஸ் சட்டத்தில் திருத்தம்

சென்னைநகர போலீஸ் ஆக்டை மேலும் திருத்த, சென்னை சர்க்கார் சட்டசபையில் மசோதா வொன்று கொண்டு வருவாரெனத் தெரிகிறது. கைவண்டிகளில் அளவுக்கு மேல் பாரம் ஏற்றினால் குற்றமாகும் 71-எம். பிரிவின் தண்டனைக்குரியதொரு குற்றத்தைப் புரிந்தோரை சப்-இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறைவான அந்தஸ்துடைய எந்தப்போலீஸ் அதிகாரியும் 'அரஸ்ட்' (கைது) செய்தல் கூடாதென்பது இம்மசோதாவில் சேர்க்கப்படும்.

அறிவுப்பணி புரியும் நமக்கு அடக்குமுறை பரிசா?

அவல நிலை நீங்க இன்பத்திராவிடம் காண்போம்

சோமரசம்பேட்டையில் பராங்குசம் - சீனுவாசன் - துரைராசன் முழக்கம்

சோமரசம்பேட்டை, நவ. 13- திருச்சி மாவட்டம் சோமரசம் பேட்டை, தி. மு. க. துவக்க விழாப்பொதுக்கூட்டம் மிகச்சிறந்த முறையில் 12-11-49 சனி மாலை 6 மணிக்குத் துவக்கப்பட்டது.

ஜி. பராங்குசம்

செயலாளர் ஏ ஜான் அவர்கள் முன் மொழிய, தோழர் கே. கோவிந்தராசன் வழி மொழிய, திருச்சி மாவட்ட அமைப்பாளர் தோழர் ஜி. பராங்குசம் அவர்கள் தலைமை தாங்கினர். தலைவர் தம் முன்னுரையில், திராவிடர் கழகத்திலிருந்து பணிபுரிந்து, பயிற்சியும் பண்பும் பெற்ற தொண்டர்களும் தலைவர்களும் பெருவாரியாகப் பிரிந்து, தி. மு. கழகம் என்ற தனி முகாம் அமைத்தது பெரியாரின் பொருந்தாத — ஜனநாயகத்துக்கு மாறுபட்ட திருமண ஏற்பாட்டின் வேதனை தோய்ந்த விளைவே என்பதாக விளக்கமாகப் பேசினர்.

அடுத்து தோழர் எம். எஸ். ...ியும், தோழர் எஸ். நெடுமாறன் அவர்களும் பேசினர்கள்.

டி. கே. சீனிவாசன்

அதன் பின்னர் தோழர் டி. கே. சீனிவாசன் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

"இன்றையதினம் எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன். நம் காங்கிரஸ் தோழர்கள் மங்களகரமான மஞ்சள் பெட்டிக்கு ஓட்டு போடுங்கள் என்று மக்களை மயக்கி ஓட்டு வாங்கி, ஆட்சி பீடத்தில் அமர்ந்து, இப்போது நம்மைத் துப்பாக்கி முனை கொண்டு அடக்கி ஆள்கின்றனர். எங்குபார்த்தாலும் நம் ஆளவந்தார்கள் 144 சட்டம், கண்ணீர் புகை, துப்பாக்கிப் பிரயோகம் முதலியவைகளை உபயோகித்துவருகிறார்கள். பாட்டாளி மக்களுக்குப் பயன்படும் முறையில் யாதொரு செயலும் செய்யக்காணோம். என்ன நல்ல காரியம் செய்வதாய் இருந்தாலும், பணம் இல்லை என்ற காரணம் காட்டுகிறார்கள். சீரங்கம், மதுரை, திருப்பதி முதலிய இடங்களில் உள்ள ஆலயங்களில் எவ்வளவு பணம் முடங்கிக் கிடக்கின்றன. எவ்வளவு ஏக்கர் நிலம் மானியம் விடப்பட்டிருக்கின்றன. ஏன் இந்த சொத்துக்களை மக்களுக்குப் பயன்படுத்தக்கூடாது? இது விஷயங்களையெல்லாம் மக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் காங்கிரஸ் தோழர்கள் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற பாரதியார் பாட்டை பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, பாரதியார் கண்ட உன்னதமான சமத்துவப் பொருந்திய சமுதாயத்தை தரிசித்தார்களா? சட்டத்தை நாட்டு மக்களுக்கு நலிவு உண்டாக்கும் முறையிலே, பொதுஜன பாதுகாப்பாக ஆக்கும் ஆளவந்தார்களான பார்ப்பனர், பஞ்சமன் அற்ற சமுதாயத்தை ஆக்குவதில் சட்டம் இயற்றக் கூடாது? இந்தச சமத்துவத்தை வலியுறுத்தும் எங்கள் கட்சியையும் கம்யூனிஸ்டுகளைப் போன்று ஒழிக்க முனைந்தால், அருந்து போகும் முகாம் ஆளும் வர்க்கமான நீங்களாகத்தான் இருப்பீர்களே ஒழிய, நாங்களாக இருக்கமாட்டோம். அழிவுப் பாதையிலே, பாசிசத்தை நோக்கி நீங்கள் சென்றுகொண்டிருக்கிறீர்கள். வீழ்ச்சியுற்ற ஜார் போக்கிலே செல்லும் நீங்கள், அழிவை அணைக்கத்தான் போகிறீர்கள் என்று அறிவிக்கிறேன்" என்றும் இன்னும் பல பேசி முடித்தார்

இரா. துரைராசன்

பின்னர் தோழர் இர. துரைராசன் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் பின்வருமாறு:-

"வரலாற்றுப்புகழ்படைத்தவர்கள் ஊர் துவக்க விழாவிலே கலந்துகொண்டு சொற்பொழிவாற்றும் பேறுபெற்றமைக்கு இறும்பூதெய்துகிறேன். முன்னேற்றக் கழகம் அமைத்து அறிவு பரப்பும் அரும்பணியாற்றிவரும் நமது அணிவகுப்பை நோக்கி ஆளவந்தார்கள் அடுத்தடுத்து அடக்குமுறை அம்புகளை விடுத்தபடி உள்ளார்கள். பாட்டாளி மக்களின் கூட்டுத் தோழர்களாக இருந்து நாட்டை ஆளுவோம் என்று, ஓட்டு வேட்டையின் போது கூறி, சட்டசபை சென்று நாட்டை ஆளும் "நல்ல"வர்களான நமது ஆளவந்தார்கள், பாட்டாளிகளின் வாட்டத்தைப் போக்காதது மட்டுமல்ல, துப்பாக்கிக் குண்டுகளைப் பட்டினியால் துடிக்கும் உழைப்பாளி உலகிற்குப், புது மகுடம் பூண்டு ஆண்டுவருகின்ற இந்த இரண்டாண்டு காலத்தில்: அளித்து வருகிறார்கள். நமது ஆளவந்தாரின் அவல ஆட்சியிலே, மக்களுக்கு உழைக்கும் மாவீரர்கள் மாண்டு ஒழிகின்றனர். இதுமட்டுமல்ல தோழர்களே பட்டப்பகலிலே, பகுத்தறிவுப் பணிபுரிந்து வந்த மாவீரர், நமது கழக அனுதாபி உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் பலா மரத்திலே தூக்கில் மாட்டப்பட்டார், மாபாதகர்களால். அந்த மக்களுக் குழைக்க மாவீரனை மாண்டொழியச் செய்த மாபாதகனை, மண்டலம் ஆளும் நம் ஆட்சிப் பீடத்தார் இன்றுவரை கண்டுபிடித்து தண்டித்தார்களா? மக்களின் ஆத்திரத்தை அடக்குவதற்கு 'வேலாயுதம் கொலைவழக்கு' என்ற ஒரு நாடகத்தை நடத்தி, எதிரிகள் அனைவரும் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்துவிட்டனர். வாதத்திற்காக எதிரிகள் குற்றமற்றவர்கள் என்று கொண்டாலும்கூட, உண்மையான ஒரு குற்றவாளி இருக்க வேண்டுமல்லவா? ஏன் ஆளவந்தார் அந்தக் கொலைகாரனைக் கண்டுபிடித்து தண்டிக்கவில்லை? தலை மறைவாய் உள்ள கம்யூனிஸ்டுகளைப் பிடித்து அடைக்கும் அந்த அபூர்வ ஆள்வோரின் சி. ஐ. டிகள், கொலைகாரனைக் கண்டு பிடிக்கப் பயன்படவில்லையே! இதனைத்தான் இன்று நாங்கள் நாட்டு மக்களை நோக்கி நல்ல தீர்ப்பு வழங்குமாறு கேட்கின்றோம்.

அவல நிலை நீங்க வழி

இதனை நாங்கள் ஒரே கட்சியினர்தான் ஊராள்வோரின் கூர்வாளையும் பொருட்படுத்தாமல், எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாமல், ஆத்திரத்துக்கும் அடக்கு முறைக்கும் உட்படாமல், இந்நாட்டிலே எடுத்துக் காட்டி வருகிறோம். எங்களையும் கூண்டோடு பிடித்து சிறையிலே தள்ள, இன்று சட்டசபையிலே நீதி கோரும் வாயில் அடைக்கப்பட்ட ஒரு அவசரச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கு முன் அறிவிப்பாக தோழர் அண்ணாத்துரைக்கு இப்போதே 153-ஏ பிரிவின் கீழ் ஓலை வந்துவிட்டது. எவ்வளவு இன்னல் வந்தாலும் நாங்கள் மக்களுக்குத் தொண்டு புரிந்து கொண்டுதான் வருவோம்.

அரசியல் துவக்க மன்றம் இதே நேரத்தில் நமது திராவிடநாட்டிற்கு ஒரு அடிமை முறிச்சீட்டு தயாரித்து வருகிறது. நாட்டிலே நமக்கோ உணவில்லை, உடையில்லை, உறைவிடமில்லை, கல்வியில்லை, சுகாதார வசதி இல்லை. இவற்றைத்தரவோ ஆட்சிப்பீடத்தாருக்குப் பணமில்லை. மத்திய சர்க்காரிடமிருந்தோ உதவியில்லை. இந்த அரசியல் சூழ்நிலையிலே-நாம் பொருளியல் நிலையிலே வடநாட்டு டாட்டாக்களால், டால்மியாக்களால் வேறு சுரண்டப்பட்டு, வாழ்க்கையை வேதனைக்கூடமாக ஆக்கிக்கொண்டு வாழ்கிறோம். திராவிடர்களின் வாழ்வு சொந்த நாட்டிலே வேலாயுதங்களாக, கடல் கடந்து வாழச் சென்ற நாடுகளிலே கணபதிகளாக இருக்கிறது! இந்த அவல நிலை நீங்க நமது இன்பத் திராவிடம் அமைய வேண்டும். அதற்கு நாட்டு மக்களாகிய நீங்கள் ஆதரவு தர வேண்டுமாக பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்' என்பதாக விளக்கமாக அரசியல், பொருளாதார பிரச்னைகளை அலசிக்காட்டி, கலை உலகிலே எப்படிச் சங்க இலக்கியம், அகம், புறம், கலித்தொகை அப்புறப்படுத்தப்பட்டு, பாரதமும் ராமாயணமும் புகுத்தப்பட்டன என்பது பற்றியும், கடவுட்கொள்கை எங்ஙனம் பண்டைய தமிழனுக்குப் புனிதமாக இருந்து ஆரிய புரோகிதப் புரட்டர்களால் கயமைக்குணம் கொண்ட கணக்கிலடங்கா காட்டுமிராண்டிக் கடவுள்களாக உருவெடுத்தன என்பது பற்றியும் விளக்கமாகப் பேசி தமது நன்றியுடன் முடித்தார்.

தலைவர் முடிவுரையில், 'ஆதரவாளர்களின்' சில கேள்விகளுக்குத் தகுந்தமுறையில் பதிலளித்து ஜனநாயகக் கோட்பாட்டை வலியுறுத்தினர்.

கடைசியாக செயலாளர் டாக்டர் ஏ. ஜான் அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது. (செ-ர்)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

19-11-49

திருவானைக்காவல் :—	ஈ. வெ. கி. சம்பத். இரா. துரைராசன்.
எட்டுகுடி :—	டி. கே. சீனிவாசன், கோ. இராதாமணாளன்.

20-11-49

ஆம்பூர் :—	இரா. நெடுஞ்செழியன், மா. இளஞ்செழியன்.
காஞ்சிபுரம் :—	சி. என். அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன்.
கரூர் :—	ஈ. வெ. கி. சம்பத், டி. கே. சீனிவாசன் ஜி. பராங்குசம்.
திருவாரூர் :—	இரெ. இளம்வழுதி, காஞ்சி கல்யாணசுந்தரம்.
குமாரமங்கலம் :—	சி. பி. சிற்றரசு, ஜி. என். இராஜு.
புதுக்கோட்டை :—	ஏ. வி பி. ஆசைத்தம்பி, என். எஸ் இளங்கோ.

தொழில் உலகிற்கு மதிப்பு தராவிட்டால் நாகரிகம் நசித்துவிடும்

முதலாளிகளின் எதேச்சாதிகாரம் ஒழியவேண்டும்

—————: (O) :—————

இலங்கை தொழில்சமரசக் கமிஷனரின் கருத்துரை

'தன் சிப்பந்திகளை தன் இஷ்டப்படி டிஸ்மிஸ் செய்ய எந்த முதலாளிக்கும் உரிமை உண்டு என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டால் நாகரிக தேசங்களில் அமுலாகிவரும் முதலாளி-தொழிலாளர் உறவு முறை அர்த்தமற்றதாகிவிடும். இந்த விபரீத கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. இது சமூக நலனுக்கு முற்றிலும் பாதகமானது"

இது இலங்கை தொழில் சமரசக் கமிஷனர் தோழர் கார்த்திகேசு அவர்கள் அண்மையில் வெளியிட்டத் தீர்ப்பு.

இலங்கை ரோபசி எஸ்டேட் என்ற தோட்டத்தில் தொழிற்சங்க வேலைகளுக்காக சிலதொழிலாளர் வேலையினின்று நீக்கப்பட்டனர். அது தவறு, அவர்களை மீண்டும் வேலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தவே தோழர் கார்த்திகேசு மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்பால் இலங்கை இந்திய தொழிலாளர் வெற்றி பெற்றனர் என்பது ஒரு புறமிருப்பினும், தோழர் கார்த்திகேசு அவர்களின் தீர்ப்பில் அடங்கியுள்ள கருத்துக்களை நாம் கவனிக்க வேண்டும். முதலாளிகள் தம்மிஷ்டப்படி தொழிலாளிகளை டிஸ்மிஸ் செய்யலாமென்ற நிலை ஏற்பட்டால், அதனால் முதலாளி—தொழிலாளி உறவு கெடும் என்கிறார் அவர். ஆம்; இது முற்றிலும் உண்மை. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டில் அடிக்கடி வேலை நிறுத்தங்களும் அதனைத் தொடர்ந்து அனாவசியமான குழப்பங்களும் ஏற்பட்டதை, ஏற்பட்டுவருவதை நாம் காண்கிறோம். தொழிலாளிகளை முதலாளிகள் தம்மிஷ்டப்படி டிஸ்மிஸ் செய்வது பற்றிய இத்தகைய விளைவுகள் ஏற்படுகின்றன என்று சொல்லுவதற்கில்லை. பொதுவாக தொழில் உலகுக்கு முதலாளிகள் மதிப்பு தராவிட்டாலும் தொல்லையான விளைவும். இதைத்தான் தோழர் கார்த்திகேசுவின் தீர்ப்பு தெளிவுபடுத்துகிறது. முதலாளி தொழிலாளி உறவு நாகரிகத்தின் சின்னம் என்பது அவரது தீர்ப்பிலிருந்து புலனாகும் மற்றொரு உண்மை. ஆகவே உலகில் நாகரிகம் தழைக்க வேண்டுமானால், தொழில் உலகை அலட்சியப்படுத்தும் மனப்பான்மை முதலாளிகளை விட்டு அகலவேண்டும். அப்பொழுதுதான் எங்கும் அமைதியை நாம் எதிர்பார்க்க முடியும்.

இனி நடப்பவை

திருவானைக்கோவில்— சீரங்கம்-திருவானைக்கோவில் தி. மு. க. கிளையின் துவக்க விழா 19-11-49 சனி மாலை 5-மணிக்கு தோழர் சி. வடிவேல் தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், இரா. துரைராசன், டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இடம்:— திருவானைக்கோவில் பாரதி தெரு.

* * *

பெரிய காஞ்சீபுரம்— இவ்வூர் பெரிய கம்மாளத்தெரு, தி. மு. க. கிளையின் துவக்க விழா 20-11-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு நடைபெறும். அதுபோது காஞ்சி நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் சி. வி. இராசகோபால் அவர்கள் தலைமையில் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. ஏ. மதியழகன், வெ. சம்பந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஆம்பூர்— இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 20-11-49 ஞாயிறு மாலை 6-மணிக்கு வ. உ. சி. மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், மா. இளஞ்செழியன், வே. பாலகிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

● ● ●

கரூர்—20-11-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு இவ்வூர் வஞ்சியம்மன் கோவில் துரை நாகம்மையார் திடலில் ஓர் தி. மு. கழகப்பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

புதுக்கோட்டை—இவ்வூர் திலகர் மைதானத்தில் 20—11—49 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் தே. நாராயணன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

ஸ்ரீவில்லிபுத்தூர் — இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக கிளையின் அமைப்புக் கூட்டம் 20—11—49 அன்று நடைபெறும். கழகத்தோழர்களனைவரும் வந்து இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

(இடம் :— ஆராய்சிப்பட்டித் தெரு)

* * *

சாட்டுப்பாடி—இவ்வூர் வ. உ. சி. வாலிபர் கழகத்தின் சார்பில் வ. உ. சிதம்பரனார் நினைவு நாள் 19—11—49 சனி மாலை 5-30 மணிக்கு தோழர் வே. மு. இரத்தினம் தலைமையில், ரேடியோ மைதானத்தில் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. பி. முருகன எம். ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். கப்பல் விமானத்தில் வ. உ. சி. யின் உருவப்பட ஊர்வலமும் நடைபெறும்

● ● ●

திருவாரூர்—இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா 20-11-49 ஞாயிறு மாலை மங்கலஊர்த் தோழர் வை. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், இரெ. இளவழுதி பி. ஏ; டி. கே. சங்கரன், ச. ஜெகநாதன் ஆகியோர் பேசுவர்.

* * *

அனந்தபூர்—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பாக, 20-11-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு புதுவைர் பீகமெமோரியல் மண்டபத்திற்கு அருகில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது "தென்னாட்டு ஐக்கியம்" என்பது பற்றிப் பலர் பேசுவர். வட சென்னைத்தோழர் பி. வி. முத்துசாமியும் கலந்து கொள்வார்.

* * *

உறையூர்—இவ்வூர் வள்ளுவர் மன்றத்தின் சார்பில், 20-11-49 ஞாயிறு காலை 10 மணிக்கு காசுக்காரச் செட்டித்தெரு "கலைமன்றத்தில்" ஓர் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் மா. மீ. மருதமுத்து தலைமையில் தோழர் கோ. துரைராசன் "மக்களும் குறளும்" என்பது பற்றிப்பேசுவார்.

● ● ●

மதுரை — இவ்வூர் சந்தைப் பேட்டை, அண்ணாத்துரை வாசகசாலையின் செயற்குழுக்கூட்டம் 20—11—49 காலை 10 மணிக்கு நடைபெறும். உறுப்பினரனைவரும் தவறுவது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

திருவையாறு—திருவையாறு சுற்று வட்டங்களில் தி. மு. கழகம் அமைப்பது பற்றி 20-11-49 ஞாயிறு மாலை 4 மணிக்கு இவ்வூர் தெற்கு வீதி 75-எண்ணுள்ள இல்லத்தில் ஓர் ஆலோசனைக்கூட்டம் நடைபெறும். அதுபோது சுற்றுவட்டக் கிராமங்களிலுள்ள தி மு.க. தோழர்களனைவரும் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

● ● ●

மதுரை—இந்நகர் திராவிட மாணவர் முன்னேற்றக் (கிளை) கழகத்தின் செயற்குழுத் தேர்தல் 20-11-49 ஞாயிறு மாலை 4-மணிக்குத், தெற்குவாசல், தானமுத்து—நடராசன் படிப்பகத்தில் நடைபெறும்.

* * *

சென்னை— சென்னை 'ஓட்டேரி தி. மு. க. கிளையின் சார்பாக, 20-11-49 ஞாயிறு காலை 10 மணிக்கு ஓட்டேரி பிர்க்லின் ரோடு 21 எண்ணுள்ள இல்லத்தில், தோழர் வே. த. அர்ச்சுனனார் அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப் பெறும்.

* * *

குமாரமங்கலம்—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா 20—11—49 காலை 9 மணிக்கும், பொதுக் கூட்டம் அன்று மாலை 6 மணிக்கும் நடைபெறும். தோழர் இ. பி. சிற்றரசு, கோபி. ஜி. என். ராசு, ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை :— கோவை நகர தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 20-11-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறும். அதுபோது நகரில் கழகப் பிரசாரங்களைத் தீவிரமாக நடத்துவதற்கான ஆலோசனை செய்து முடிவு செய்யப்படும்.

ஆந்திர மாகாண உடனடி நிறுவனம்

காரியக் கமிட்டி முடிவு

ஜே. வி. பி. அறிக்கையின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு, ஆந்திர மாகாணத்தை திறுவ உடனடியாக வழிவகைகளைச் செய்யுமாறு இந்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்வதென காங்கிரஸ் காரியக் கமிட்டி 16-ம் தேதியன்று முடிவு செய்தது.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

நிலக்கோட்டை—நகரக் கிளை

நிலக்கோட்டை, நவ. 9—

இவ்வூர் திராவிடர் கழக உறுப்பினர்களின் கூட்டமொன்று 8—11—49 அன்று பட்டிவீரன் பட்டித்தோழர் டபுள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள் முன்னிலையில் தோழர். அ. க. சங்கரபாண்டியன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது இவ்வூர் திராவிடர் கழகத்தை "திராவிட முன்னேற்றக் கழகம்—நிலக்கோட்டை நகரக் கிளை" என மாற்றியமைப்பதாக (ஏகமனதாக)த் தீர்மானிக்கப்பட்டது. (செ-ர்)

● ● ●

அளகாபுரி—சிற்றூர்க்கிளை

அளகாபுரி, நவ 9—

மதுரை மாவட்டம், அளகாபுரி தி. மு. க. அமைப்புக் கூட்டம் 1-11-49ல் தோழர் சி. அ. க சின்னக்கணபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—அளகாபுரி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்,—ஏ. எஸ். மாரிமுத்து, துணைச்செயலாளர்:-வி. கே. வீராதன், பொருள் உறுப்பினர்:- சி. அ. க. சின்னகணபதி, விளம்பர உறுப்பினர்:—சி. அ. கன்னியப்பன். ஏனைய செயலுறுப்பினர்கள்:- கே. சோலைமுத்தையா, எஸ். தனுஷ்கோடி, எஸ். அய்யாவு, அ. வெள்ளைச்சாமி, ஏ. சக்திவேல், பெரிய கருப்பன், பி. வீரணன், பெரிய புலியன், ரா. மாயழகன், பெருமாள், கருப்பணன், சின்னணன், சேதுராமன், தா. அழகன், செல்வம். (து—ர்)

● ● ●

கொற்கை—சிற்றூர்க்கிளை

கொற்கை, நவ. 9—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர் பி. திராவிடமணி தலைமையில் 5—11—49 அன்று நடைபெற்றது. தோழர் தங்கராசன், இசைமுத்து ஆகியோர் திராவிட நாட்டுப் பண்பாடினர். தோழர்கள் இரா. அறவேந்தன், தமிழரசு, ச. சிவசங்கு ஆகியோர் தி. மு. கழக அவசியம் பற்றிப் பேசினர். பின்பு, "திராவிட முன்னேற்றக் கழகம்— கொற்கை சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுதேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- பி. திராவிடமணி; துணைச் செயலாளர்:— ஐ. இராசன்; பொருள் உறுப்பினர்:— க. வேலாயுதம்; விளம்பர உறுப்பினர்:— ரா. பொன்னையா. மற்ற செயலுறுப்பினர்கள்:- கே. பிச்சை, மா. செல்லத்துரை, பி. அய்யம் பெருமாள், பாண்டியன். (வி-உ)

● * *

சாத்தமங்கலம்—சிற்றூர்க்கிளை

சாத்தமங்கலம், நவ. 9—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 26—10—49 ல் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக்கழகம்— சாத்தமங்கலம் சிற்றூர்க்கிளை நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ஆர். இராசமாணிக்கம்; துணைச்செயலாளர்:- கே. சொக்கலிங்கனார்; பொருள் உறுப்பினர்:— எம். ரெங்கசாமி; விளம்பர உறுப்பினர்:- ஆர். வெங்கடசுமணன். (வி-உ)

* * *

கோமாகுடி—சிற்றூர்க்கிளை

கோமாகுடி, நவ. 9—

லால்குடி தாலுகா, கோமாகுடியில் திராவிடர் கழகத்தோழர்கள் சிலர் தோழர் சுவிவராமன் அவர்கள் கடையில் தோழர் சிவராமன் தலைமையில் கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம் — கோமாகுடி சிற்றூர்க்கிளை" நிறுவினர். பின்பு கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-சி. சிவராமன்; துணைச்செயலாளர்:— து. நமசிவாயம், பொருள் உறுப்பினர்:— வ. ரெத்தினம்; விளம்பர உறுப்பினர்:- ஏ. கலியபெருமாள். ஏனைய செயற்குழுவினர்:-சி. அப்புசாமி, அ. கணேசன், ச. ராமலிங்கம். மேலும் சில செயற்குழுவினரைச் சேர்த்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. (வி-உ)

● ● ●

திருமலாபுரம்—சிற்றூர்க்கிளை

திருமலாபுரம், நவ. 9—

இவ்வூரில் 8-11-49 அன்று "திராவிட முன்னேற்றக் கழகம்—திருமலாபுரம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, பின்வரும் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— வீ. கருப்பையா, துணைச்செயலாளர்:—மா. பெரியசாமி; பொருள் உறுப்பினர்:-ச. கருப்பையா, விளம்பர உறுப்பினர்:- ம. ரெ. இரத்தினம். ஏனைய செயலுறுப்பினர்கள்:—எஸ். எஸ். சண்முகம், எஸ். சீனியப்பன், ஏ. பொன்னுசாமி, எஸ். வி. இராஜபாண்டியன், எஸ். எம். கருப்பணன், எம். வேல்சாமி, டி. என். சௌந்திரபாண்டியன், கே. பி. சிவம், டி. டி. ராஜன், சே. மாமுண்டி, எம். சுப்பையா. (வி—உ)

* * *

சக்கம்பட்டி—சிற்றூர்க்கிளை

சக்கம்பட்டி. நவ. 9—

மதுரை மாவட்டம், சக்கம்பட்டி தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர். எஸ். சுப்பிரமணி தலைமையில் 8-11-49ல் நடைபெற்றது. அதுபோது தோழர் மா. க. செல்வநாதன் சொற்பொழிவாற்றினார். பின்பு, "திராவிட முன்னேற்றக் கழகம்—சக்கம்பட்டி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, பின் வரும் செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—வி. கோபாலன், துணைச்செயலாளர்:-கா. சு. அழகர்சாமி, பொருள் உறுப்பினர்:— ச. அ. சடையாண்டி, ஏனையசெயற்குழுவினர்—கா. தில்லைச்சிதம்பரம், சி. கா. சுப்பிரமணியம், தி. அ. ஆறுமுகம், க. மாரிமுத்து, சி. கருப்பசாமி, (செ—ர்)

* * *

ராயப்பனூர்—சிற்றூர்க்கிளை

ராயப்பனூர், நவ. 14—

சின்ன சேலத்தைச் சேர்ந்த ராயப்பனூரில் 13-11-49 அன்று தோழர் ரா. அ. பெரியதம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்—ராயப்பனூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ரா. அ. பெரியதம்பி, துணை செயலாளர் சி. பெரியசாமி, பொருள் உறுப்பினர்:-ரா. பரமசிவம். விளம்பர உறுப்பினர்:- வை. பிச்சமணி. ஏனைய செயற்குழுவினர்:-சே. சோலைமுத்து, அ. பழனிமுத்து, பே. ராமசாமி, சே. சோலை, சு. மருதமுத்து, கோ. காசிலிங்கம், பெ. சின்னசாமி, க. அண்ணாமலை, வை. பிச்சபழனி, பெ. அங்கமுத்து, கோம்பையன், (வி-உ)

● ● ●

சென்னை அயன்புரம்—நகர உட்கிளை

சென்னை, நவ. 14—

சென்னை, அயன்புரம், தி. மு. க. அமைப்புக் கூட்டம் 13 11-49-ல் வேளாளத்தெருப்பள்ளியில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம் — சென்னை நகர அயன்புரம் உட்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர் —நா. சிதம்பரநாதன்; துணைச் செயலாளர்— மு. துரைசாமி, பொருள் உறுப்பினர்- செ. கோவிந்தன். ஏனைய செயலுறுப்பினர்கள்:— மு. சுப்பிரமணியம், நா. சிதம்பரநாதன், செ. கோவிந்தசாமி, ஏ. கோவிந்தன், மு. துரைசாமி. (செ-ர்)

* * *

அழகனுபுரம்-சிற்றூர்க் கிளை

அழகனுபுரம், நவ. 14—

நாகர்கோயில் மாவட்டம், அழகனுபுரம் தி. மு. க. அமைப்புக்கூட்டம், 12-11-49 அன்று தோழர் மா. மனுவேல் தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழக அவசியம்பற்றி சிலதோழர்கள் பேசினர். பின்பு, "திராவிட முன்னேற்றகழகம் அழகனுபுரம்சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—இரா. ஆண்டி; துணைச் செயலாளர்:—இரா. அ. மோகன் காந்தி; பொருள் உறுப்பினர்கள்:—அ. சு. வேலாயுதம், வே. முப்பிடாதி; விளம்பர உறுப்பினர்கள்:— ச. தங்கப்பன், மு. சுப்பிரமணியம். ஏனைய செயற்குழுவினர்:— மா, மனுவேல், ச. தருமரத்தினம், மு. சுப்பிரமணியம், த. மாதேவன், ம. குமாரசாமி, இரா. அ. மோகனகாந்தி, ச. தங்கப்பன், வே. முப்பிடாதி, அ. சு. வேலாயுதம், ச. வ. பெருமாள், இரா. ஆண்டி. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் "மாலை மணி"

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ.	2—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	6—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	12—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர், "மாலை மணி"

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி: மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர் 'மாலைமணி'

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.